**Tamil Nadu Electricity Board Engineers' Sangam**
**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/எண்.26, தேதி 18.11.2016.

ஐயா,

பொருள்: எதிர்பாராமல் ஏற்படும் மின்விபத்துக்களுக்கு விசாரணையின்றி பொறியாளர்கள், பணியாளர்கள் நியாயமற்று தண்டிக்கப்படுவது – கைவிட வலியுறுத்தல் – தொடர்பாக.

சமீப காலங்களில் தாழ்வழுத்த மின்பாதையில் விபத்து ஏற்படுமானால் எந்த விதமான விசாரணையுமின்றி உயர் அதிகாரிகளின் வற்புறுத்தலால் பிரிவுப் பொறியாளர்கள் முதல் உதவி செயற் பொறியாளர்கள் வரை உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்படுகின்றனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 2 கோடியே 64 இலட்சத்திற்கும் மேலான பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கிட 2,46,748 மின் மாற்றிகள், 5.98 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இப்பயன்பாட்டிலுள்ள மின் மாற்றிகளும் தாழ்வழுத்த மின்பாதைகளும் பல வருடங்களுக்கு முன்பாக நிறுவப்பட்டு அதனுடைய வாழ்நாள் காலத்தை (Life period) கடந்தும் போதுமான தளவாடப் பொருட்கள் இல்லாததால் மாற்ற முடியாமல் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதனை புதுப்பிக்க வேண்டியது நிர்வாகத்தின் கடமையாகும்.

மின்வாரியப் பணிகளில் முக்கியமான மின்விநியோகப் பகுதிகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வேலைப்பளு ஒப்பந்தம் தொழிலாளர் நல ஆணையர் முன்பாக தொழிற்தகராறு சட்டம் பிரிவு 18(1) மற்றும் 12(3) மூலம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வேலைப்பளு ஒப்பந்தத்தில் மேற்கூறிய மின்மாற்றிகள், மின்பாதைகள் ஆகியவற்றை பராமரிக்க குறைந்தபட்ச பணியாளர்கள் எண்ணிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை முழுமையாக அமல்படுத்தி அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ளச்செய்ய வேண்டியது மின்சார வாரியத்தின் தார்மீக, சட்டப்பூர்வமான கடமையாகும். சுமார் 40%க்கும் மேலாக பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

நிதிச்சுமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வாழ்நாள் காலத்தை கடந்தும் மின்மாற்றிகள், மின்பாதைகளை வாரியம் புதுப்பிக்காத நிலையிலும், இவற்றில் மின்பழுது ஏற்பட்டால் சரிசெய்யக்கூடிய பணியாளர்களையும், பொறியாளர்களையும் சட்ட ரீதியாக தொழிற் தகராறு சட்ட ஒப்பந்தப்படி ஏற்றுக்கொண்ட அளவில் நியமிக்காத நிலையிலும் தடையின்றி, விபத்தின்றி பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது வாரியத்தின், உயர் அதிகாரிகளின் கடமையிலிருந்து வழுவிய செயலாகும்.

இந்நிலையில் எதிர்பாராமல் ஏற்படும் மின்பழுதுகளை, மின் விபத்துக்களை உரிய விசாரணையோ, ஆய்வோ செய்யாமல், அவர்கள் குற்றம் புரிந்துள்ளனரா, இல்லையா, கடந்த காலங்களில் சிறப்பாக பணியாற்றி இருக்கிறார்களா, சிறப்பான பணிபுரிந்து நற்சான்றிதழ் வாரியத்தில் பெற்றிருக்கிறார்களா என எந்த அடிப்படை தன்மையையும் ஆராயமல் பத்திரிக்கை மற்றும் ஊடகங்களின் செய்தியை மட்டுமே அடிப்படையாக கொண்டு பொறியாளர்களையும், பணியாளர்களையும் பணி இடைநீக்கம், ஊர்மாறுதல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்குவது என ஒரு தலைபட்சமாக நியாயமற்று வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருவது முற்றிலும் தவறானது.

சமீப காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் உயர் அதிகாரிகளின் நிர்பந்தத்தால் எடுக்கப்பட்டது என்றும் தங்களது கைகள் கட்டப்பட்டுள்ளது, வாரியத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மீது தங்களுக்கு உடன்பாடு இல்லை என்றாலும் தங்களால் எந்த உதவியும் செய்ய முடியாத நிலை உள்ளது என தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் தெரிவிக்கின்றனர். உண்மை நிலை உணர்ந்தும் உயர் மட்ட அதிகாரிகள் நிர்பந்தம் காரணமாக உரிய விசாரணையின்றி கீழ்மட்ட பொறியாளர்களை தண்டனைக்கு உட்படுத்துவது தொடர்ந்து வருகின்றது.

எனவே இதுபோன்று முறையற்று விசாரணையின்றி பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை வாரியம் உடனே கைவிடவும், இதுவரை இதுபோன்று வழங்கப்பட்ட உத்தரவுகளை இரத்து செய்திடவும், அனைத்து பொறியாளர்களின், பணியாளர்களின் நியாயமான உணர்வுகளுக்கு மதிப்பளித்தும், தார்மீக சட்டபூர்வமான கடமைகளுக்கு மதிப்பளித்து வாரிய உயர் அதிகாரிகள் செயல்படவும் பொறியாளர் சங்கம் வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

நன்றி,

இப்படிக்கு,

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

18/11/16

நகல்:

இயக்குனர் / விநியோகம் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
இயக்குனர் / நிதி / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
செயலாளர் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தொழில் நல்லுறவு ஆலோசகர் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
சகோதர தொழிற் சங்கங்கள்.